# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2216/16 - 2021 පෙබරවාරි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.02.25

*2216/16 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

*மதுவரி அறிவித்தல் இலக்கம் : 07/ 2021*

**பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமைத்துவ முறைமை**

*(52 ஆம் அத்தியாயமான) மதுவரி கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது.*

*2019.11.01 ஆந் திகதிய 2147/ 75 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 06/ 2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல், 2021.03.01 ஆந் திகதிய 2164/ 72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 01/ 2020 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல், 2020.06.01 ஆந் திகதிய 2178/ 4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 03/ 2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல், 2021.01.01 ஆந் திகதிய 2208/ 34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 01/ 2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் மற்றும் 2019.06.20 ஆந் திகதிய 2128/ 30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 04/ 2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்களை இத்தால் இரத்துச்செய்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, பெப்புருவரி 25.*

ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள், 2021 மதுவரி (பாதுகாப்பு இயல்புக்கூறுகள்) ஒழுங்குவிதிகள் என அழைக்கப்படும்.

2. (இங்கு இதன் பிறகு "பாதுகாப்பு இயல்புக்கூறு" என குறிப்பிடப்படும்) I ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்படும் ஒட்டுத் துண்டு அல்லது டிஜிட்டல் அடையாளம் (இங்கு இதன் பிறகு "கட்டளைச் சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) (52 ஆம் அத்தியாயமாகிய) மதுவரி கட்டளைச் சட்டத்தின் 32 (ஏஅ) ஆம் பிரிவின் நோக்கத்திற்காக இவ் ஒழுங்குவிதிகள் ஊடாக நிர்ணயிக்கப்படும் பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் இயல்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அதே போல், II ஆம் அட்டவணையின் இலக்கம் 02 மற்றும் இலக்கம் 03 இலுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீது ஒட்டுத்துண்டு அல்லது டிஜிட்டல் அடையாளம் ஆகிய இரண்டு முறைகளில் ஒரு முறையை மாத்திரம் பயன்படுத்துவதற்கு உரிமம்பெற்ற உற்பத்தியாளரின் வேண்டுகோளுக்கு அமைவாக அனுமதி வழங்க முடியும்.

மேலும், II ஆம் அட்டவணையில் இலக்கம் 02 மற்றும் இலக்கம் 03 இல் உள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீது, உரிமம்பெற்ற உற்பத்தியாளரின் வேண்டுகோளுக்கு அமைவாக, விசேட சந்தர்ப்பங்களில் மாத்திரம் தற்சமயம் பாவனையிலுள்ள பாதுகாப்பு இயல்புக்கூறினை மாற்றுவதற்காக (இங்கு இதன் பிறகு "ஆணையாளர் நாயகம்" எனக் குறிப்பிடப்படும்) மதுவரி ஆணையாளர் நாயகத்திடம் குறைந்தபட்சம் ஆறு (06) மாதங்களுக்கு முன்னர் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3. இறக்குமதியாளர் அல்லது உரிமம்பெற்ற உற்பத்தியாளர் ஒருவரினால் II ஆம் அட்டவணையில் உள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீது பாதுகாப்பு இயல்புக்கூறு ஒட்டப்பட்டிருந்தால் அன்றி, அத்தகைய மதுவரி விதிக்கத்தக்க பொருட்களை வைத்திருத்தல், கொண்டு செல்லல், களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது.

அதே போன்று, இவ் ஒழுங்குவிதிகள் பயன்வலுப்பெறும் திகதி அன்று, II ஆம் அட்டவணையில் இலக்கம் 02 மற்றும் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருள் ஒன்று, உரிமம்பெற்ற உற்பத்தியாளர் ஒருவர் இவ் ஒழுங்குவிதிகள் பயன்வலுப்பெறும் திகதியில் இருந்து தொண்ணூறு (90) நாட்களுக்குள், தற்சமயம் நடைமுறையிலுள்ள II ஆம் அட்டவணையில் இலக்கம் 02 மற்றும் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருள் மீது பாதுகாப்பு இயல்புக்கூறு ஒன்றினை ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அதே போல், இன்னும் இவ் ஒழுங்குவிதிகள் பயன்வலுப்பெறும் திகதி அன்று, II ஆம் அட்டவணையில் இலக்கம் 02 மற்றும் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருள் தொகுதிகளைக் கொண்டுள்ள வர்த்தகர்கள் இவ் ஒழுங்குவிதிகள் பயன்வலுப்பெறும் திகதியில் இருந்து தொண்ணூறு (90) நாட்களுக்குள், II ஆம் அட்டவணையில் இலக்கம் 02 மற்றும் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீது பாதுகாப்பு இயல்புக்கூறு ஒன்றினை ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. ஆணையாளர் நாயகத்தினால் -

(அ) வரி அல்லது தீர்வை வரி செலுத்தப்படாத மதுபான பாவனையைத் தடுத்தல் ;
(ஆ) மதுவரி வருமானத்தினை மேலும் பாதுகாத்தல் ; மற்றும்
(இ) போலி மதுபானங்களைத் தடுத்தல்

போன்ற பணிகளுக்காக பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமை முறைமையை நடைமுறைப்படுத்தல், முகாமை செய்தல், மேற்பார்வை செய்தல், பரீட்சித்தல் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறினை வழங்குதல் ஆகியவற்றினைப் பொறுப்பேற்றல் வேண்டும்.

5. (1) பாதுகாப்பு இயல்புக்கூறினைப் பெற்றுக்கொள்வதற்காக இறக்குமதியாளர் அல்லது உரிமம்பெற்ற உற்பத்தியாளர், ஆணையாளர் நாயகத்திற்கு கையெழுத்து மூலம் (manually) அல்லது மின்னியல் முறை (electronic method) ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) இறக்குமதி தொடர்பான ஆவணங்கள் மற்றும் ஆணையாளர் நாயகத்தினால் கோரப்படும் அத்தகைய பிற ஆவணங்கள், பாதுகாப்பு இயல்புக் கூறுகளுக்கான விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) இறக்குமதியாளர் அல்லது உரிமம்பெற்ற உற்பத்தியாளர் ஒருவர், ஒவ்வொரு மாத ஆரம்பத்திற்கும் முன்னர், குறித்த இறக்குமதியாளர் அல்லது உரிமம்பெற்ற உற்பத்தியாளர் பயன்படுத்துவற்கு எதிர்பார்க்கும் பாதுகாப்பு இயல்புக்கூறுகளின் எண்ணிக்கை பற்றிய குறைந்தபட்சம் தொண்ணூறு (90) நாள் முன்னறிவிப்பு ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) (அ) மேற்கூறப்பட்ட இறக்குமதியாளர் அல்லது உரிமம்பெற்ற உற்பத்தியாளரால் -

(i) II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய மதுவரி செலுத்தப்பட்டிருக்காவிடின்,

(ii) II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீதான லேபிள் மற்றும் பொதித்தொகுதிகளுக்கான அங்கீகாரம் பெற்றிருக்காவிடின்,

(iii) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவானதாக இல்லையாயின், மற்றும்

(iv) கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவானதாக இல்லையாயின்,

II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீது ஒட்டுவதற்கான பாதுகாப்பு இயல்புக்கூறினைப் பெற்றுக்கொள்வதற்கான வேண்டுகோள் ஆணையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்பட முடியும்.

(ஆ) இவ் ஒழுங்குவிதியில் (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம், ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், பாதுகாப்பு இயல்புக்கூறினைப் பெற்றுக்கொள்வதற்காக இறக்குமதியாளர் அல்லது உரிமம்பெற்ற உற்பத்தியாளர் இவ் ஒழுங்குவிதிகளில் III ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

6. இறக்குமதியாளரைப் பொறுத்தவரையில், குறித்த ஆவண விடயங்களை முடிப்பதற்கு முன்னர் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஆணையாளர் நாயகம் பாதுகாப்பு இயல்புக்கூறுகளை வழங்க முடியும்.

7. 5 ஆம் ஒழுங்குவிதியில் (4) (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணைங்களைப் பெற்றுக்கொண்ட பின்னர், ஆணையாளர் நாயகம், குறிப்பிட்ட பாதுகாப்பு இயல்புக்கூறுகளின் தொகையை இறக்குமதியாளர் அல்லது உரிமம்பெற்ற உற்பத்தியாளருக்கு வழங்குதல் வேண்டும்.

8. (1) மதுபான வகைகளுக்கான மொத்த விற்பனை உரிமம்பெற்ற நிலையங்களில் (எப். எல். 03) II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மதுவரி விதிக்கத்தக்க பாதுகாப்பு இயல்புக்கூறுகளை ஒட்டுதல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பில் இறக்குமதியாளர் பொறுப்பேற்றல் வேண்டும்.

(2) உரிமம்பெற்ற மதுபான உற்பத்திசாலைகளில் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீது பாதுகாப்பு இயல்புக்கூறினை ஒட்டுதல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பில் உரிமம்பெற்ற உற்பத்தியாளர் பொறுப்பேற்றல் வேண்டும்.

(3) இவ் ஒழுங்குவிதியில் (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு இயல்புக்கூறினை செயல்படுத்தும் பொறுப்பினை இலங்கை மதுவரி திணைக்களம் பொறுப்பேற்றல் வேண்டும்.

9. விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் உட்பட ஏனைய இடங்களில் செயல்படும் தீர்வை வரி அற்ற கடைகளுக்காக வழங்கப்படும், II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களின் மீது பிணைக் குதங்களில் வைத்து பாதுகாப்பு இயல்புக்கூறினை ஒட்டும் செயல்முறையை இலங்கை சுங்கம் பொறுப்பேற்க வேண்டியதுடன்–

(அ) இலங்கை சுங்கத்தின் மேற்பார்வையின் கீழ் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீது பாதுகாப்பு இயல்புக்கூறு ஒட்டப்பட்டிருந்தாலன்றி, மற்றும்

(ஆ) இலங்கை சுங்கத்தினால் மேற்கூறிய பாதுகாப்பு இயல்புக்கூறு ஒட்டப்பட்டிருந்தாலன்றி,

II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க எந்த பொருளும் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் உட்பட ஏனைய இடங்களில் செயல்படும் தீர்வை வரி அற்ற கடைகளுக்கு வழங்கப்படுதல் கூடாது.

எவ்வாறாயினும், மதுபானங்களுக்கான மொத்த விற்பனை உரிமத்தின் (உ. ப. இல. 03) கீழ் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளரால், மொத்த விற்பனைக்காக அனுமதிக்கப்பட்ட (உ. ப. இல. 03) உரிமம்பெற்ற இடங்களில், மதுவரி திணைக்களத்தின் மேற்பார்வையின்கீழ் மேற்கூறிய மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீது பாதுகாப்பு இயல்புக்கூறுகளை ஒட்டவேண்டியதோடு, அது இலங்கை மதுவரி திணைக்களத்தினால் செயல்படுத்தப்படுதல் வேண்டும்.

10. II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருளொன்றின் மீது ஒட்டப்பட்டுள்ள பாதுகாப்பு இயல்புக்கூறுகள் அவற்றின் மூலத்தன்மைக்கு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அவற்றை வெளிப்படுத்துதல், சேதப்படுத்தல், திருத்துதல், ஒழித்தல், சுரண்டுதல் அல்லது அழித்தல் ஆகாது :

இருப்பினும், இவ் ஒழுங்குவிதி-

(i) நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட நுகர்விற்காக மற்றும்

(ii) உள்நாட்டு நுகர்வு நோக்கத்திற்காக மதுபானத்தை விற்பனை செய்ய அனுமதிபெற்ற உரிமதாரர் ஒருவருக்கு 1979.12.07 ஆந் திகதிய 66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 661 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலுக்கு அமைவாக ஒரே வகையைச் சார்ந்த மதுபான போத்தல்கள் இரண்டினை மாத்திரம் திறந்து வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில்,

ஏற்புடையதாதல் ஆகாது.

11. இறக்குமதியாளர் அல்லது உரிமம்பெற்ற உற்பத்தியாளர் ஒருவரினால் -

(1) II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருளொன்றின் மீது, ஆணையாளர் நாயகத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்றவாறு தெளிவாகத் தெரியக்கூடிய இடமொன்றில் பாதுகாப்பு இயல்புக்கூறினை ஒட்டுதல் வேண்டும் ;

(2) பாதுகாப்பு இயல்புக்கூறினை கொள்வனவு செய்தல், பாதுகாப்பு இயல்புக்கூறுகளுக்கான செலவுகளைப் பொறுப்பேற்றல், பாதுகாப்பு இயல்புக்கூறினை ஒட்டும் பொறிகளுக்கான செலவுகளைப் பொறுப்பேற்றல், ஒட்டும் பணிக்கான செலவுகளைப் பொறுப்பேற்றல் மற்றும் அவ் உபகரணங்களைப் பொருத்தமான முறையில் தயார் செய்து கொள்ளல் அல்லது திருத்திக்கொள்ளல், அச்சாதனங்களைப் பொருத்தமான முறையில் தயார் செய்து கொள்ளல் அல்லது திருத்திக்கொள்ளல் மற்றும் ஒவ்வொரு உற்பத்தி வரிசைகளிலும் (Production Lines) புதிய அல்லது நவீனமயப்படுத்தப்பட்ட முறைமைகளை நிறுவுதல் மற்றும் ஒன்றிணைத்தலுக்குத் தேவையான இடவசதி உட்பட ஏனைய சம்பந்தப்பட்ட செயற்பாட்டுச் செலவுகளைப் பொறுப்பேற்றல் வேண்டும் ;

(3) தொடர்ச்சியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மற்றும் தேவையானபோது பயன்படுத்துவதற்காக பாதுகாப்பு இயல்புக்கூறுகளை ஒட்டும் நடவடிக்கைக்குத் தேவையான போதியளவு உபகரணங்களையும் துணைக் கருவிகளையும் கொள்வனவு செய்துகொள்ளல் வேண்டும் ;

(4) மேற்கூறிய உபகரணங்கள் மற்றும் துணைக்கருவிகளை நல்ல நிலையில் பேணுதல் வேண்டும் ;

(5) பாதுகாப்பு இயல்புக்கூறுகளை ஒட்டும் உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகளை ஒட்டும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் துணைக்கருவிகளில் ஏற்படும் சகல தொழில்நுட்ப, இயக்கக் கோளாறுகளையும் உடன் சீர்செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் ;

(6) தேவையானபோது பயன்படுத்துவதற்காக மேலதிக உபகரணங்கள் மற்றும் துணைக்கருவிகளைப் பெற்றுக்கொள்வதோடு இருப்பில் வைத்திருத்தலும் வேண்டும் ;

(7) உபகரணங்களின் தொழிற்பாடு தொடர்பாக ஏதும் கோளாறுகள் ஏற்படுமிடத்து இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும் ;

(8) இவ் ஒழுங்குவிதிகளில் IV ஆம் மற்றும் V ஆம் அட்டவணைகளில் வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக பொருட்பட்டியல் ஏடுகளையும் ஆவணங்களையும் பேணுதல் வேண்டும் ; மற்றும்

(9) II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களின் வருடாந்த உற்பத்தி அளவுகள் அல்லது இறக்குமதி செய்யப்படும் அளவுகள் பற்றிய முன்கூட்டிய கணிப்பினைத் தயாரித்தல் வேண்டும் ; மற்றும்

(10) மதுவரி திணைக்களத்தினால் அல்லது பாதுகாப்பு இயல்புக்கூறு வழங்குனரினால் உரிமம்பெற்ற உற்பத்திசாலை ஒன்றில் பொருத்தப்படும் டிஜிட்டல் அச்சுப் பொறி, ஏனைய உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் உட்பட தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்புக்கான முழுப் பொறுப்பையும் உரிமப்பத்திரதாரர் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

12. மேலும், உரிமம்பெற்ற உற்பத்தியாளர் ஒருவர் -

(1) உற்பத்தி வழங்கல் தொழிற்பாட்டினை இடையூறின்றி மேற்கொள்வதற்காக போதிய எண்ணிக்கையிலான உற்பத்தி வரிசைகளையும் பாதுகாப்பு இயல்புக்கூறுகளை ஒட்டும் உபகரணங்களை போதிய எண்ணிக்கையிலும் பேணுதல் வேண்டும் ; மற்றும்

(2) காலபோக ஏற்ற இறக்கங்களைக் கருத்திற்கொண்டு, சராசரி பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் தொகைக்கு ஏற்ப குறைந்தபட்சம் பத்து (10) நாட்களுக்குப் போதுமான வகையில் பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் இருப்பைப் பேணுதல் வேண்டும்.

13. II ஆம் அட்டவணையில் இலக்கம் 02 மற்றும் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களை ஏற்கனவே உற்பத்தி செய்கின்ற உரிமம்பெற்ற உற்பத்தியாளர் ஒருவர் இவ் ஒழுங்குவிதிகள் செயல்வலுப்பெறும் திகதிக்கு முந்திய தினத்தில் இருந்து அறுபது (60) நாட்களுக்குள், இவ் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பாதுகாப்பு இயல்புக்கூறுகளை ஒட்டும் உபகரணங்கள் மற்றும் ஏனைய துணைக் கருவிகளைப் பெற்றுக்கொள்ளல், ஸ்தாபித்தல், பரீட்சித்தல் மற்றும் இயக்குதல் ஆகியவற்றினை மேற்கொள்ளல் வேண்டும்.

அதேபோன்று, பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமை முறைமையை நடைமுறைப்படுத்தற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

14. (1) இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால்–

(அ) தலைவராக நியமிக்கப்படுவதற்காக திறைசேரி பிரதி செயலாளர் ஒருவர் ;
(ஆ) இலங்கை மதுவரி திணைக்களத்தின் மதுவரி ஆணையாளர் நாயகம் ;
(இ) அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் அலுவலர் ஒருவர் ;
(ஈ) இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் அலுவலர் ஒருவர் ; மற்றும்
(உ) இலங்கை மதுவரி திணைக்களத்தின் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமை முறைமையை மேற்பார்வையிடும் பிரதி மதுவரி ஆணையாளர் நாயகம்

ஆகிய அலுவலர்களைக் கொண்ட (இங்கு இதனகத்துப் பின்னர் “குழு” என குறிப்பிடப்படும்) “பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமைக் குழு” நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) குழு உறுப்பினர்கள் ஒரு வருட காலம் தமது பதவியை வகிக்க வேண்டிய அதே சமயம் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் தீர்மானிக்கக்கூடியவாறான குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்காக சபையின் பதவிக்காலம் நீடிக்கப்படலாம்.

(3) குழுவின் ஏதேனும் கூட்டம் ஒன்று குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவையாவது குழு கூட்டப்பட வேண்டியிருப்பினும் தேவைப்படும்போது கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும்.

(5) குழுவின் பணிகள் தொடர்பான நடைமுறை குழுவினால் ஒழுங்கமைக்கப்பட முடியும்.

(6) ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு மதுவரி திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் அல்லது ஆணையாளர் நாயகத்தினால் அவருக்குப் பதிலாக அதிகாரம்பெற்ற வேறு ஒரு அலுவலரைப் பங்குபற்றச் செய்ய முடியும் ; மற்றும்

(7) குழுக் கூட்டங்களின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்களின் கடுமையான இரகசிய தன்மையானது குழு உறுப்பினர்களால் எப்பொழுதும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

15. குழுவின் பணிகளாவன-

(அ) காலத்திற்குக் காலம் பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் வடிவமைப்பு மற்றும் தன்மையைத் தீர்மானித்தல் ;

(ஆ) காலத்திற்குக் காலம் பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் விண்ணப்ப முறை, செயற்பாட்டு முறை, கட்டளையிடல், அச்சிடல், களஞ்சியப்படுத்தல், வெளியிடல் மற்றும் விநியோக பொறிமுறைகளைத் தீர்மானித்தல் ;

(இ) காலத்திற்குக் காலம் இறக்குமதியாளர் மற்றும் உரிமம்பெற்ற உற்பத்தியாளரினால் பேணப்பட வேண்டிய பொருட் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களின் மாதிரி அமைப்பைத் தீர்மானித்தல் ;

(ஈ) காலத்திற்குக் காலம் பாதுகாப்பு இயல்புக்கூறுகளைப் பரீட்சித்தல் மற்றும் தொடர்புபடுத்தற் செயன்முறைக்கான பொறிமுறைகள், நடைமுறை மற்றும் ஒழுங்குமுறைகளைத் தீர்மானித்தல் ;

(உ) காலத்திற்குக் காலம் பாதுகாப்பு இயல்புக்கூறுகளின் திறந்த, மறைபொருள் மற்றும் தடயவியல் அடையாளங்களைச் சான்றுப்படுத்தும் செயல்முறையைத் தீர்மானித்தல் ;

(ஊ) கேள்வி அடிப்படையில் பாதுகாப்பு இயல்புக்கூறுகளின் வழங்கலுக்கான கட்டளைக்கு அங்கீகாரம் வழங்குதல் ;

(எ) பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் பௌதீக, தொழில்நுட்ப மற்றும் பிரயோக செயலாற்றுகையை மதிப்பீடு செய்தலும் உரிய பரிந்துரைகளை அமுல்படுத்தலும் ;

(ஏ) பாதுகாப்பு இயல்புக் கூறுகளை வடிவமைத்தல், அச்சிடல் மற்றும் தொடர்புடைய ஏனைய அனைத்து விடயங்களினதும் செயல்முறை தொடர்பான விடயங்கள் மற்றும் தரம் ஆகியவற்றினை உறுதி செய்யும் பொருட்டு முறையான வழிகாட்டல் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குதல் ;

(ஐ) இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காகத் தேவைப்படக்கூடிய, ஒப்படைக்கப்பட்டுள்ள அல்லது இடைநேரான வேறு பணியொன்றினை நிறைவேற்றல் ; மற்றும்

(ஒ) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு காலாண்டு அடிப்படையில் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

16. இறக்குமதியாளர் அல்லது உரிமம்பெற்ற உற்பத்தியாளர் ஒரவரினால், சந்தர்ப்பத்திற்குப் பொருந்தும் வகையில், தமது உரிமம்பெற்ற அல்லது அதிகாரம்பெற்ற வளாகங்களில் அல்லது பிணைக் குதங்களில் அல்லது மதுபானங்களுக்காக மொத்த விற்பனை அனுமதிப்பத்திரம் (எப்எல்.03) பெற்ற இடங்களில் பாதுகாப்பு இயல்புக்கூறுகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக பாதுகாப்பான மற்றும் போதியளவான களஞ்சியசாலை வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

17. (1) ஆணையாளர் நாயகத்தினால் பின்வரும் சந்தர்ப்பங்களில் கட்டளைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவிற்கு அமைவாக பாதுகாப்பு இயல்புக்கூறுகள், கருவிகள், உபகரணங்கள், வாகனங்கள் அல்லது பொருட்கள் தடைசெய்யப்படுதல் வேண்டும்:-

(அ) பாதுகாப்பு இயல்புக் கூறுகள் போலியாக தயாரிக்கப்பட்டிருத்தல் ;

(ஆ) ஆணையாளர் நாயகத்திற்கு மீள ஒப்படைக்க வேண்டிய பாதுகாப்பு இயல்புக் கூறுகள் அவ்வாறு மீள ஒப்படைக்கப்படாத. அல்லது அவ் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் எவரெவருக்கு வழங்கப்பட்டதோ அவர் களல்லாத வேறு நபர்களிடமிருந்து குறித்த பாதுகாப்பு இயல்புக்கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டிருத்தல் ;

(இ) இங்குள்ள ஒழுங்குவிதிகளின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களைக் களஞ்சியப்படுத்தல், மறைத்து வைத்தல் அல்லது போக்குவரத்து செய்வதற்காக வாகனம் ஒன்று பயன்படுத்தப்பட்டிருத்தல் ;

(ஈ) போலியான பாதுகாப்பு இயல்புக்கூறுகளைத் தயாரிப்பதற்காக உபகரணங்கள் அல்லது பொறிகள் பயன்படுத்தப்பட்டிருத்தல் ; அல்லது

(உ) II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களில் போலியாக தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு இயல்புக் கூறு காணப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் அல்லது ஆணையாளர் நாயகத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் வழிகாட்டல்களுக்கு அமைவாக அல்லாத வகையில் ஒட்டப்பட்ட பாதுகாப்பு இயல்புக்கூறு காணப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் அல்லது இவ் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பாதுகாப்பு இயல்புக்கூறு இல்லாத சந்தர்ப்பம் ஒன்றில்.

(2) ஏதேனும் தகராறு ஒன்று ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அதனை விசாரணை செய்வதற்காக ஆணையாளர் நாயகத்தினால் குழு ஒன்று நியமிக்கப்பட முடியும்.

18. II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருள் இறக்குமதியாளர் ஒருவர் அல்லது உரிமம் பெற்ற உற்பத்தியாளர் ஒருவரினால் பின்வரும் சந்தரப்பங்களில் பயன்படுத்தப்படாத பாதுகாப்பு இயல்புக்கூறுகள் ஆணையாளர் நாயகத்திற்கு மீள ஒப்படைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) உரிமம் பெற்ற உற்பத்தியாளரினால் II ஆம் அட்டவணையில் இலக்கம் 02 மற்றும் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களின் உற்பத்தி நிறுத்தப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில்

(ஆ) பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் சுற்றுக்களில் கோளாறு உள்ள சந்தர்ப்பம் ஒன்றில் அல்லது

(இ) ஆணையாளர் நாயகத்தினால், குறித்த பாதுகாப்பு இயல்புக் கூறினை பாவித்தல் கூடாது என தெரிவிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பம் ஒன்றில்.

19. சேதமடைந்த பாதுகாப்பு இயல்புக்கூறினை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் பரிசோதிப்பதற்காக இறக்குமதியாளர் அல்லது உரிமம் பெற்ற உற்பத்தியாளர் தன்னிடம் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

20. எந்தவொரு இறக்குமதியாளரும் அல்லது உரிமம் பெற்ற உற்பத்தியாளரும் ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதியின்றி குறித்த இறக்குமதியாளர் அல்லது உரிமம் பெற்ற உற்பத்தியாளருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு இயல்புக்கூறினை அந்த நபருக்கு சொந்தமான வேறு உற்பத்தி அல்லது இறக்குமதி அலகு ஒன்றிற்கு மாற்றுதல் கூடாது.

21. புதிய அல்லது நவீனமயப்படுத்திய பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமை முறைமையை நிறுவும் சந்தர்ப்பம் ஒன்றில், குறிப்பிட்ட புதிய அல்லது நவீனமயப்படுத்திய பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமை முறைமை நிறுவப்படுவதற்கு குறைந்த பட்சம் அறுபது (60) நாட்களுக்கு முன்னர், ஆணையாளர் நாயகத்தினால் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களின் இறக்குமதியாளருக்கு அல்லது உரிமம் பெற்ற உற்பத்தியாளருக்கு அது பற்றி எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

22. இறக்குமதியாளர் அல்லது உரிமம் பெற்ற உற்பத்தியாளர் ஒருவர் -

(அ) ஏதேனும் உற்பத்தி வரிசைகள் இயங்காது விட்டு இருபத்து நான்கு (24) மணித்தியாலங்களுக்குள், அவ் உற்பத்தி வரிசைகள் இயங்காது விட்டமை தொடர்பாக ஆணையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடல் வேண்டும்.

(ஆ) வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முறைமையின் பேணுகை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பொறுப்பேற்றல் வேண்டும்.

(இ) ஏதேனும் இயக்கக் கோளாறு அல்லது பாதுகாப்பு மீறல் ஒன்று இடம்பெற்று இருபத்து நான்கு (24) மணித்தியாலங்களுக்குள் குறித்த இயக்கக் கோளாறு அல்லது பாதுகாப்பு மீறல் பற்றி ஆணையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடல் வேண்டும்.

(ஈ) IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களில் லேபிள் மற்றும் பொதித்தொகுதி தொடர்பில் ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், இவ் ஒழுங்குவிதி தீர்வை வரியற்ற கடைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீது ஏற்புடையதாதல் ஆகாது.

(உ) IIஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களுக்காக ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ள லேபிள் மற்றும் பொதித்தொகுதிகளை மீள உருவாக்கும் போது லேபிள் மற்றும் பொதித்தொகுதிகளில் ஏதேனும் மாற்றம் பற்றிபின்வரும் சந்தர்ப்பங்களில் முப்பது (30) நாட்களுக்கு முன்னர் ஆணையாளர் நாயகத்திற்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) (i) செயல்படாத உற்பத்தி வரிசைகளை மீண்டும் செயற்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்றில்,

(ii) உற்பத்தி வரிசைகளை செயலிழக்கச் செய்யும் போது,

(iii) பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் போது அல்லது உற்பத்தி வரிசைகளை மாற்றம் செய்யும் போது: மற்றும்

(iv) புதிய உற்பத்தி வரிசைகளை நிறுவும்போது-

நிறுவும்போது அல்லது அகற்றும் போது முப்பது (30) நாட்களுக்கு முன்னர் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

23. (1) எவரேனும் ஒருவர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை மீறுகையில் -

(அ) IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரிவிதிக்கத்தக்க ஏதேனும் பொருளொன்றில் ஒட்டப்பட்டுள்ள பாதுகாப்பு இயல்புக்கூறு மீது அச்சுப் பதித்தல் அல்லது உருமாற்றுதல்.

(ஆ) இவ் ஒழுங்குவிதிகளின் கீழ் பாதுகாப்பு இயல்புக் கூறு ஒட்டப்படுவதில் இருந்து விலக்களிக்கப்பட்ட சந்தர்ப்பம் நீங்கலாக பாதுகாப்பு இயல்புக்கூறு ஒட்டப்படாத IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களைக் கொண்டிருத்தல்.

(இ) ஆணையாளர் நாயகத்தின் அனுமதியின்றி பாதுகாப்பு இயல்புக்கூறுகளை பெற்றுக் கொள்ளல் அல்லது பாதுகாப்பு இயல்புக்கூறுகளைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தல்.

(ஈ) ஆணையாளர் நாயகத்தின் அனுமதியின்றி, பாதுகாப்பு இயல்புக்கூறுகளை அச்சிடல்,தயாரித்தல் மற்றும் வேறு வழிகளில் வடிவமைத்தல் அல்லது மீளுருவாக்கல்.

(உ) ஆணையாளர் நாயகத்தின் அனுமதியின்றி அச்சிடப்பட்ட, தயாரிக்கப்பட்ட அல்லது வேறு வழிகளில் பெற்றுக் கொண்ட ஏதேனும் பாதுகாப்பு இயல்புக் கூறு ஒன்றினைக் கொண்டிருத்தல்.

(ஊ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக ஒட்டப்பட்ட பாதுகாப்பு இயல்புக்கூறு இன்றிய IIஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மது வரி விதிக்கத்தக்க பொருட்களைக் கொண்டிருத்தல், கொண்டு செல்லல், போக்குவரத்து செய்தல், விநியோகம் செய்தல்,விற்பனை செய்தல்மற்றும் விற்பனைக்காக காட்சிப்படுத்தல், மற்றும்

(எ) போலியான பாதுகாப்பு இயல்புக்கூறு ஒட்டப்பட்ட IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களைக் கொண்டிருத்தல், கொண்டு செல்லல், போக்குவரத்து செய்தல், விநியோகம் செய்தல்,விற்பனை செய்தல் மற்றும் விற்பனைக்காக காட்சிப்படுத்தல்,

செய்தல் ஆகாது.

24. பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமை முறைமையை மேற்பார்வை செய்வதற்காக நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் விசேட கணக்காய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட முடியும்.

25. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் மீறல் தொடர்பாக, கட்டளைச் சட்டத்தின் 27, 47, 48, 50 மற்றும் 56 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

26. இவ் ஒழுங்குவிதிகளில், சொற்பதங்கள் தொடர்பில் பொருட்கோடல் தேவைப்பட்டாலன்றி -

"மதுவரி விதிக்கத்தக்க பொருள்" என்பதற்கு, (52 ஆம் அத்தியாயமாகிய) மதுவரி கட்டளைச் சட்டத்தின் ஊடாக அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருளையே எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

"பாதுகாப்பு இயல்புக்கூறு" என்பது, I ஆம் அட்டவணையில் குறிப்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள பாதுகாப்பு இயல்புக்கூறுகளின் தன்மையைக் குறிக்கும்.

"பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமை முறைமை" என்பதற்கு, பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமை செய்வதற்காக பயன்படுத்தப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளைக் குறிக்கும்.

"தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள்" என்பது, சகல வகையான கணினி சேர்வர்கள், கணினிகள், மென்பொருள், செயற்பாட்டு வலையமைப்புக்கள், கம்பி மற்றும் கம்பியல்லா வலைப் பின்னல்கள், இலத்திரனியல் சாதனங்கள், முடிவுறுத்துகை, கூறுகள், சாதனங்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய அசையும், அசையா, செயற்படும், செயற்படா மற்றும் கையினால் இயக்கப்படும் கூறுகள் உள்ளடங்கும்.

"இறக்குமதியாளர்" என்பதற்கு இவ் ஒழுங்குவிதிகளில் II ஆம் அட்டவணையில் விசேடமாக குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களை இறக்குமதி செய்வதற்காக (52 ஆம் அத்தியாயமாகிய) மதுவரி கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் உரிமப் பத்திரம் ஒன்றைக் கொண்டுள்ள ஒருவரைக் குறிக்கும்.

"உரிமம் பெற்ற உற்பத்தியாளர்" என்பதற்கு, இவ் ஒழுங்குவிதிகளில் II ஆம் அட்டவணையில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களை உற்பத்தி செய்வதற்காக (52 ஆம் அத்தியாயமாகிய) மதுவரி கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் உரிமப் பத்திரம் ஒன்றைக் கொண்டுள்ள ஒருவரைக் குறிக்கும்.

"வர்த்தகர் ஒருவர்" என்பதற்கு, இவ் ஒழுங்கு விதிகளில் II ஆம் அட்டவணையில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்களை விற்பனை செய்தல், விற்பனைக்காக இருப்பில் வைத்திருத்தல் அல்லது காட்சிப்படுத்தலுக்காக (52 ஆம் அத்தியாயமாகிய மதுவரி கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் உரிமப் பத்திரம் ஒன்றைக் கொண்டுள்ள ஒருவரைக் குறிக்கும்.

(2 ஆம் ஒழுங்குவிதி)

## I ஆம் அட்டவணை

| பாதுகாப்பு இயல்புக் கூறு | விபரம் |
|---|---|
| (1) ஓட்டுத்துண்டு | (i) நீளம் (100 மி.மீ), அகலம் (20 மி.மீ) மற்றும் எடை (சதுர மீற்றருக்கு 60 கிறாம்)<br>நீளம் (80 மி.மீ), அகலம் (16 மி.மீ) மற்றும் எடை (சதுர மீற்றருக்கு 60 கிறாம்)<br>நீளம் (50 மி.மீ ), அகலம் (10 மி.மீ) மற்றும்எடை (சதுர மீற்றருக்கு 60 கிறாம்)<br>விட்டம் (20 மி.மீ) மற்றும் எடை (சதுர மீற்றருக்கு 60 கிறாம்)<br><br>மேலே இயல்புக்கூறுகளின் மாற்றமுறும் இயல்புடன்,<br><br>(ii) சான்றுப்படுத்தல், இனங்கானல், சேதமாக்கமுடியாதவாறு தயாரித்தல் மற்றும் தானாக ஒட்டிக்கொள்ளக்கூடிய, தானாக அழியக்கூடிய மற்றும் மீண்டும் பயன்படுத்த முடியாத ஒட்டுத்துண்டுகள் உள்ளடங்கிய பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் நிலையற்ற, மூடப்பட்ட, திறந்த மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பாதுகாப்பு இயல்புக்கூறுகள்.<br><br>(iii) ஹொலொகிரபி முறையிலான பாதுகாப்பு இயல்புக் கூறுகள். |
| (2) டிஜிட்டல் அடையாளங்கள் | (i) விசேட அடையாளங்களுடன் கூடிய உணவு தரப்படுத்தலை (Food Gradable) உள்ளடக்கிய தீந்தைகள் (டிஒக்ஸிரைபொநியுக்லெயிக் அமிலம் (DNA) அடங்கிய) பயன்படுத்தப்பட்டு, விசேட அடையாளத்துடன் கூடிய பாதுகாப்பு டிஜிட்டல் இலக்கம் ஒன்று (Unique Secure Digital Number) மற்றும் உபகரணம் ஒன்றின் உதவியுடன் வாசிக்கக்கூடிய விசேட அடையாளத்துடன் கூடிய குறியீடு ஒன்றின் (Unique Machine Readable Code) சேர்க்கையுடன் (Combination) கூடிய டிஜிட்டல் அடையாளம்.<br><br>(ii) டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக சான்றுப்படுத்தலையும் இனங்காணலையும் உள்ளடக்கிய பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் நிலையற்ற, மூடப்பட்ட, திறந்த மற்றும் அவற்றுடன் தொடர்புடைய இயல்புகளைக் கொண்ட அடையாளங்கள். |

(3 ஆம் ஒழுங்குவிதி)

## II ஆம் அட்டவணை

| இலக்கம் | வகை |
|---|---|
| 01 | இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் |
| 02 | உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் |
| 03 | உள்நாட்டு மதுபானங்கள் |

(5 (4) (ஆ) ஆம் ஒழுங்குவிதி)

## III ஆம் அட்டவணை

| இலக்கம் | வகை | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| *01* | பாதுகாப்பு இயல்புக்கூறு ஒன்றிற்கு | *2.00* |

*(11 (8) ஒழுங்குவிதி)*

## IV ஆம் அட்டவணை

பாதுகாப்பு இயல்புக்கூறுகள் தொடர்பான பொருட்பட்டி

| *திகதி* | *கையிருப்பிலுள்ள பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் எண்ணிக்கை* | *பெற்றுக் கொண்ட பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் எண்ணிக்கை* | *போத்தலில் அடைத்த அல்லது இறக்குமதி செய்த மதுபானத்திற்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் எண்ணிக்கை* | *சேதமடைந்த பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் எண்ணிக்கை* | *செயலூக்கம் பெற்ற பாதுகாப்பு இயல்புக் கூறுகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

*(11 (8) ஒழுங்குவிதி)*

## V ஆம் அட்டவணை

சேதமடைந்த பாதுகாப்பு இயல்புக்கூறுகளின் பொருட்பட்டி

| *சேதமடைந்த பாதுகாப்பு இயல்புக்கூறுகளின் எண்ணிக்கை* | *சேதமடைந்த பாதுகாப்பு இயல்புக்கூறுகளின் தொகுதி இல.* | *அழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கும் கடித இலக்கமும் திகதியும்* | *சேதமடைந்த பாதுகாப்பு இயல்புக்கூறுகள் அழிக்கப்படும் திகதி* | *சேதமடைந்த பாதுகாப்பு இயல்புக்கூறுகளை பதிவழிக்கும் அலுவலர்களின் பெயர்/பதவி/ கையொப்பம்* | *உரிமதாரர் அல்லது முகவரின் கையொப்பம்* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

*02-144*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.